Registered as a NewsPaper in Ceylon ★ ★ விலை: சதம் 15

போன்: 7199
வைரம்
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.


# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49 போன்: 389


உங்களுக்குத் தேவையான
இலங்கையில் தயாரிக்கப்பெற்ற
மட்பாண்ட
மலசலகூட
பாவனைப் பொருட்களை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
கதிர்ஹாட்வெயர்ஸ்
ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 புரட்டாதி 27 ஷஃபான் 22 (13—10—71) புதன்கிழமை இதழ் 244

# 90 பேர் மீது சதிக்குற்றச்சாட்டு? கொலை, தீவைப்பு மிகுதிப்பேர்!

## பயங்கரவாதிகள் மீது விசேஷ விசாரணை மன்றங்கள் இல்லை

கொழும்பு, செவ்வாய் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதி செய்ததாக தற்போது பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் காவலில் இருந்துவரும் 90 பேர் மீது வழக்குத் தொடரப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

காவலில் இருந்துவரும் இவர்களைத் தவிர்ந்த ஏனையவர்கள் மீது கொலை, கொலை முயற்சி, தீவைப்பு போன்ற குற்றச்சாட்டுகளின் மீது விசாரணை நடைபெறும் என்றும் தெரிகிறது.

பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டுள்ளவர்களில் சுமார் 2500 பேர் பயங்கரவாதிகள் நடத்திய புரட்சி வகுப்புகளில் மாத்திரம் கலந்து கொண்டவர்களென்றும் இவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவது சாத்தியமில்லையென்றும் நம்பப்படுகிறது.

பயங்கரவாத நடவடிக்கைகள் இடம் பெற்ற இடங்களிலேயே அந்தச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் மீதான விசாரணை நடத்தப்படுவதும் சாத்தியமில்லை. சம்பவம் நடைபெற்ற இடங்களில் இன்றி வேறு இடங்களில் விசாரணைகளை நடத்துவதற்கு இப்போதைய அவசரகாலச் சட்டம் வழி செய்கிறது. விசாரணைகளைத் துரிதமாக நடத்தி முடிப்பதற்கான அவசரச் சட்டமொன்றும் விரைவில் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விசாரணைக்குட்படுத்தப்படவிருப்பவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை அட்டோர்னி ஜெனரல் இலாகா தயாரித்து வருவதாகத் தெரிகின்றது.

இப்பொழுது காவலில் இருந்துவரும் சுமார் 13,000 பேர் பற்றிய விபரங்களை உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆராய்ந்து முடித்திருக்கிறார். நவம்பர் மாத முற்பகுதியிலேயே எஞ்சியுள்ளவர்கள் பற்றிய விபரங்களையும் படித்து முடித்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பயங்கரவாதிகளின் குடும்பங்களின் நிலை, இந்த இயக்கத்தில் எப்படி சம்பந்தப்பட்டார்கள் என்பன போன்ற விபரங்களை அமைச்சர் ஆராய்ந்து வருகிறார்.

பயங்கரவாதிகள் சம்பந்தமான வழக்குகள் சாதாரண நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுமென்றும் இதற்கென விசேஷ விசாரணை மன்றங்கள் நியமிக்கப்படமாட்டா என்றும் சமீபத்தில் பிரதமர் அளித்த பேட்டியொன்றில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஐ. நா பொதுச்சபையில்

## பிரதமரின் கன்னிப் பேச்சு தொடர்கிறது!

நியூயோர்க், ஒக். 12 இந்து சமுத்திரத்தைச் சமாதானப் பிரதேசமாக்கும்படி கோரும் இலங்கையின் தீர்மானத்திற்குத் தங்கள் ஆதரவை வழங்க வேண்டுமெனப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உலகநாடுகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தமது கன்னிப் பேச்சின்பொழுது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ. நா.வில் முதன்முதலாக இலங்கையின் சார்பில் காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 1956ம் ஆண்டு பொதுச்சபையில் உரையாற்றினார். அவருக்குப் பின் இப்பொழுது பிரதமர் ஸ்ரீமாவோ அங்கு உரையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

பிரதமர் ஸ்ரீமாவோ தொடர்ந்து பொதுச்சபையில் பேசுகையில் எமது நோக்கம் இந்துசமுத்திரத்தில் அமைதி ஏற்படவேண்டுமென்பதே இந் நடவடிக்கை சர்வதேச சமாதானத்திற்கு உதவும். இந்து சமுத்திரப் பகுதியைச் சுற்றியுள்ள நிலப்பரப்பில் வாழும் மக்களுக்கு மட்டும் இது உரிய பிரச்சினையல்ல. இப் [illegible]

5-ம் பக்கம் பார்க்க

## அனுமதிபெறாது மாடு வெட்டியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், புதன் சின்னக்கடையிலுள்ள இறைச்சிக் கடையொன்றில் சீல் வைக்கப்படாத இறைச்சியை பொலிசார் கண்டுபிடித்தனர். அங்கு சீல்வைக்க பாவிக்கப்படும் கருவியொன்றையும் கைப்பற்றினர்.

சப்இன்ஸ்பெக்டர் சி. எஸ். கருணரத்தின தலைமையில் சென்ற திடீர் பரிசோதனை குழுவினருடன் யாழ். மாநகரசபை இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஏ. ஆர்னட்டும் சென்று தேடுதல் நடத்தினார்கள்.

அக்கடையில் இருமாட்டுத் தலைகளையும் மாட்டுத்தோல்களையும் இக் கோஷ்டியினர் கண்டுபிடித்தனர்.

இது சம்பந்தமாக பொலிசார் தாக்கல்செய்த வழக்கில் அனுமதி பெறாது மாடு வெட்டியதற்காக 200 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சீல்வைக்கப்படாத இறைச்சி வைத்திருந்த குற்றத்திற்காக மாநகரசபை இன்ஸ்பெக்டர் தாக்கல்செய்த வழக்கில் யாழ். மாஜிஸ்திரேட் திரு. [illegible] மெண்டிஸ் 200 [illegible] ராதம் விதித்தார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு

## 10 ஆண்டுகளில் 20 லட்சத்தால் அதிகரிப்பு

கோட்டை, செவ்வாய் 1962-63ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளைவிட இப்பொழுது எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 20 லட்சத்தால் அதிகரித்துள்ளது. கடந்த சனிக்கிழமை நாடுபூராவும் எடுக்கப்பட்ட மக்கள் கணக்கெடுப்பு மூலம் இவ்விபரம் தெரியவந்துள்ளது.

இப்பொழுது இலங்கையில் மக்கள் தொகை 1 கோடியே 27 லட்சத்து 47 ஆயிரத்து 7 நூற்று 50 பேர் ஆகும். இது முன்பு கணக்கெடுப்பு நடத்திய ஆண்டுகளைவிட 20.5 சதவிகிதம் அதிகமாகும். 1962-63ம் ஆண்டுகளில் இலங்கையின் மக்கள் தொகை 1 கோடியே 5 லட்சத்து 8 ஆயிரத்து இருநூற்று 64 பேராகும். மக்கள் தொகை வருடத்திற்கு 2.3 சதவிகிதம் அதிகரித்துவந்துள்ளது.

கொழும்பு நகரிலேயே அதிக மக்கள் வாழ்கின்றனர். இங்கு 5 லட்சத்து 63 ஆயிரத்து 705 பேர் வாழ்கின்றனர். முன்பு கணக்கெடுக்கப்பட்டபோது இருந்த மக்கள் தொகையைவிட இத்தொகை 50 ஆயிரத்தால் அதிகமாகும்.

தெஹிவளை, கல்கிசை, யாழ்ப்பாணம், கொரட்டுவ ஆகிய இடங்களிலேயே மக்கள் அதிகமாக வாழ்கின்றனர். 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் எட்டு நகரங்கள் நாட்டில் இருக்கின்றன.

தற்பொழுது எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் நகரங்களைவிட கிராமங்களிலேயே மக்கள் தொகை அதிகரித்துள்ளதென்ற உண்மை தெரியவந்துள்ளது.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன் நேற்று அம்பாறையில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 366வது இலக்கச் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
31 L 0551 ரூ 91,710

இரண்டாவது பரிசு
34 O 0736 ரூ. 36,684

மூன்றாவது பரிசு
19 U 0562 ரூ. 9,171

தலா 458 ரூபா 55 சதம் பெறும் 100 டிக்கெட்டுகளின் விபரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| | | 36 G 0734 | 20 G 0612 |
| | | 28 G 0453 | 19 G 0623 |
| | | 24 H 0395 | 03 H 0871 |
| | | 35 H 0640 | 03 H 0194 |
| | | 17 H 0148 | 35 H 0962 |
| | | 33 H 0048 | 07 J 0598 |
| | | 27 J 0309 | 01 J 0522 |
| | | 09 K 0435 | 39 K 0802 |
| | | 14 L 0570 | 14 M 0509 |
| | | 22 M 0782 | 28 M 0162 |
| | | 09 N 0487 | 32 N 0922 |
| | | 06 O 0582 | 28 O 0911 |
| | | 13 O 0179 | 18 P 0964 |
| | | 39 P 0869 | 26 P 0171 |
| | | 08 R 0286 | 21 R 0308 |
| 18 A 0645 | 26 A 0808 | 39 R 0760 | 30 R 0139 |
| 29 A 0634 | 28 A 0151 | 36 R 0828 | 27 R 0747 |
| 08 A 0446 | 01 B 0469 | 28 S 0432 | 27 S 0650 |
| 25 B 0957 | 08 C 0979 | 09 S 0775 | 20 T 0394 |
| 23 C 0186 | 20 C 0758 | 37 T 0209 | 14 T 0921 |
| 31 D 0643 | 34 D 0224 | 37 T 0984 | 26 T 0488 |
| 23 D 0410 | 15 D 0384 | 39 U 0712 | |
| 06 D 0259 | 02 D 0942 | 08 U 0866 | 17 U 0132 |
| 21 D 0697 | 14 E 0832 | 02 U 0848 | 11 U 0269 |
| 07 E 0790 | 28 E 0007 | 04 U 0234 | 03 U 0202 |
| 31 E 0142 | 27 E 0546 | 02 U 0140 | 07 U 0784 |
| 02 F 0628 | 18 G 0014 | 10 V 0462 | 29 V 0403 |
| 22 G 0593 | 36 G 0708 | 21 V 0451 | 22 V 0129 |
| 40 G 0477 | 03 G 0946 | | |

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும் ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

பட்டுச் சேலைகள் விற்பனவு! தீபாவளியா! திருமணமா!! உங்களுக்கு வேண்டிய பட்டுச்சேலைகள், முதலியனவற்றுக்கு விஜயம் செய்யுங்கள். வசந்தபுரம் சில்க்ஸ், 7, 2-ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3639

## விற்பனைக்கு

மருந்துகள், மருந்துச் சரக்குகள் சித்த ஆயுர்வேத ஆங்கில மருந்துகள். மருந்துச் சரக்குகள் சிறந்த முறையில் மலிவாகக் கிடைக்கும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3624

ஈ என் தொடரிலக்க பேஜோ 203 (PEUGEOT) நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- ஆ. சின்னத்தம்பி, 24 நல்லூர் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். 3662

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


ராஜா-யாழ்ப்பாணம்
தினசரி காலை: 10-30, பி.ப.: 2-30, 6 30, இரவு: 9-45.
ராஜேந்திரகுமார் பாபிகாபிரான் நடித்த
அஞ்ஜான

ராணி (யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த
தினசரி 4 காட்சிகள்.
நூற்றுக்கு நூறு

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த
காவியத்தலைவி
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. பாலசந்தர்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
மகத்தான தீபாவளி வெளியீடு!
* ஜெய்சங்கர்
* கே.ஆர். விஜயா
* சுந்தரராஜன்
சௌகார் ஜானகி
நாகேஷ்
விஜயலலிதா
அசோகன்
நடித்த
தேவரின்





அக்கா தங்கை

கடைசி 2 தினங்கள் மட்டும்
லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-30, இரவு 9-30.
ஜெமினி—வாணிஸ்ரீ—முத்துராமன்
மற்றும்பலர் நடித்த
தபால்காரன் தங்கை
அடுத்த வெளியீடு
ஆராதனா


அ. இ. பாடசாலைகள் உதைபந்தாட்டம்

# யாழ்ப்பாணத்தில் நாளை ஆரம்பிக்கும் 5 நாள் போட்டி

## யாழ். மாவட்டம் விளையாடாது

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை மாவட்டப் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டிகளின் 3-வது வருடாந்த உதைபந்தாட்டப் போட்டி நாளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றது.

அகில இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம், இப் போட்டியை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடாத்துகின்றது. இந்த உதைபந்தாட்டப் போட்டியில் கொழும்பு, கண்டி, களுத்துறை, நீர்கொழும்பு, சிலாபம், பதுளை, காலி, திருக்கோணமலை ஆகிய மாவட்டப் பாடசாலைகளின் தெரிவுக் கோஷ்டிகள் கலந்து கொள்ளுகின்றன.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நாளை ஆரம்பமாகும் இப் போட்டி 18-ம் திகதிவரை நடைபெறும். இறுதி நாள் போட்டியில் விளையாட்டு அமைச்சர் திரு. கே. பி. ரத்நாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சாம்பியன் கோஷ்டிக்குப் பரிசு வழங்குவார்.

### யாழ்ப்பாணம் விளையாடாது

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டியில், யாழ். மாவட்டப் பாடசாலைத் தெரிவுக் கோஷ்டி பங்குபற்றவில்லை.

கடந்த வருடம் மேற்படி சங்கத்தினால் மாவட்டப் பாடசாலைகள் சாம்பியன் கோஷ்டிகளிடையே யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி சாம்பியனாக வந்திருந்தது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே கலந்து கொண்ட கோஷ்டிகள் இருந்தும், இம்முறை இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றாதது மிகவும் வருந்தத்தக்கதாகும் என இப் போட்டியின் நிர்வாகஸ்தர் திரு. வி. ரி. கணேசலிங்கம் தெரிவித்தார். (தே நி)

உதைபந்தாட்டம்

### 'கிறீன்பீல்ட்' வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகத்துக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் மாணவர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கிறீன்பீல்ட் கழகம் 4–0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே நி)

### லக்சலா சேவை

யாழ்ப்பாணம், புதன்

இம்முறை தீபாவளியை முன்னிட்டு யாழ்ப்பாணம் லக்சலாவில் குறைந்த விலையில் ஏராளமான வேட்டிகள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அவைகளை மிக இலகுவாகப் பெற்றுச் செல்லும் வகையில் ஒழுங்கு செய்துள்ள லக்சலாவின் சேவையையும் மக்கள் பாராட்டுகின்றனர்.


8வது வாரம்
வெலிங்டன் சினிமா
பி. ப. 2-30, 6-30, 10-00
எம்.ஜி ஆர்-சரோஜாதேவி
எம் ஆர் ராதா-ரங்காராவ்
நடித்த
நீதிக்குப்பின் பாசம்

நாகவல்லி சினிமா
சுன்னாகம்
தினசரி 4-30
சனி, ஞாயிறு 10-30
CIRCUS STARS
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஔவையார்

MANOHARA
Jaffna
Daily 4 shows
Guliano Gemma
Bibi Anders
in
BLOW HOT
BLOW COLD
(color - strictly for adults)


### அனுதாபம்

யாழ்ப்பாணம், புதன்

ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர் சங்க பொதுக் காரியதரிசி ஆர் செல்லையாவின் மறைவு குறித்து சங்கம் அனுதாபம் தெரிவித்துள்ளது. கடந்த 20 வருடகாலமாக தொழிலாளர் நல்வாழ்வுக்காகத் தன்னையே அர்ப்பணித்தார் என அனுதாபத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மல்லாகம் வழக்கறிஞர் சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

மல்லாகம் வழக்கறிஞர் சங்கக்கூட்டம் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற பொழுது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. தம்பிரத்தினம், உபதலைவர்கள்: திருவாளர்கள் ஜி. வி பாலசிங்கம், ஏ. வி சகாசிவம், பொதுக்காரியதரிசி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் தனாதிகாரி திரு. கே. குணரத்தினம் நூலகம் திரு. கே. உலகநாதன்.

திருவாளர்கள் ஆர். இ. தம்பிரத்தினம், ஆ. குமரகுரு, வி. செல்லத்துரை, எஸ். நடராசா, எஸ். ஜெயதம்பி, டபிள்யூ. செல்லத்துரை ஆகியோர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### இ.மு. சங்க நிர்வாகிகள்

மாவிட்டபுரம், செவ்வாய்

மழை வீமன்காமம் கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் திரு மு. சின்னையா தலைமையில் நேற்று நடைபெற்றது.

வலி - வடக்கு காரியாதிகாரி திரு பி எஸ். பற்றிக் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆலோசகர்: மு சின்னையா தலைவர்: ஆ. சின்னையா, உபதலைவர்: செ. வைத்திலிங்கம், காரியதரிசி: ச. கந்தசாமி தனாதிகாரி: கா. பாலசுப்பிரமணியம்.

நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

### பற்றுச் சீட்டுகள் தாமதம்

பருத்தித்துறை, செவ்.

சட்டாய சேமி புக்கென இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்து ஆசிரியரின் சம்பளத்தில் ஒருபகுதி கழிக்கப்பட்டு வந்தபோதிலும் மூதல் மாதத்திற்குரிய பற்றுச் சீட்டுகளே இப்பகுதி ஆசிரியருக்குக் கிடைத்துள்ளன. மற்றைய மாதங்களுக்கான பற்றுச்சீட்டுகள் இதுவரை கிடைக்கவில்லையாம். இவ் விஷயம் பற்றி ஸ்ரீ லங்கா ஜாதிக குரு சங்க யாழ். கிளைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### பெண்கள் அதிகம்

சுழிபுரம், செவ்வாய்

நேற்று முன்தினம் நடைபெற்ற குடிசன மதிப்பு விபரத்தின் போது சுழிபுரம் மேற்கு கிராமசேவையாளர் பிரிவிலுள்ள ஒவ்வொர் குறிச்சியிலும் பெண்கள் தொகை அதிகமாக இருப்பது கணக்கெடுக்கப்பட்டுள்ளது. ஆண்களிலும் பார்க்க பெண்கள் இருமடங்கு மேல் இருப்பதாக புள்ளிவிபரம் காட்டுகின்றது.


புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை பருத்தித்துறை
பழைய மாணவர் சங்கம்

மேற்படி பாடசாலையின் 75-ம் ஆண்டுப் பூர்த்தி விழாவையொட்டி வருடாந்தப் பொதுக்கூட்டம் 17-10-71 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலையில் நடைபெறும். பழைய மாணவர்கள் சமுகம் தருக.

எம். குமாரசாமி
செயலாளர்
11-10-71 3071

றீகல் — (யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-00, இரவு 10-00 மணி
ஜித்தேந்திரா — மும்தாஸ்
(இருவேடங்களில்) நடித்த
JIGIRI DOST
மாட்டுக்கார வேலன்
(ஹிந்தி—கலர்)

5-15, 7-15 P. M. Sat. Sundays 10-30
Jack Lord - Shirley Knight in
THE COUNTERFEIT KILLER (Color)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ஜன்டைனுவிலுள்ள பாக். தூதரும் வங்காளதேசத்துக்கு மாறினர்

## பாக். ராணுவ கொடுமைகளுக்கு உலக சமாதான சபை கண்டனம்

லண்டன், அக். 12

ஆர்ஜன்டைனுவிலுள்ள பாகிஸ்தான் தூதர் வங்காள தேசத்துக்கு விசுவாசம் தெரிவித்து பதவியிலிருந்து விலகிக்கொண்டுள்ளார்.

ஆர்ஜன்டைனுவிலுள்ள பாகிஸ்தான் தூதரான அப்துல் மொனிம் பாகிஸ்தான் அரசாங்கம் கடந்த பலமாதங்களாக கிழக்குப் பாகிஸ்தானில் நடத்திவரும் ராணுவக் கொடுமைகளைக் கண்டித்தார்.

கிழக்குப்பாகிஸ்தானில் காலனி ஆதிக்கம் செலுத்திச் சரண்டுவதுடன் இரண்டரை லட்சம் மக்களுக்கு மேல் கொன்றொழித்துள்ளது என்று அவர் கூறினர். கிழக்குப்பாகிஸ்தான் முழுநினி ராஜ்யமாக சுதந்திரம் பெற்றாலன்றி அங்குள்ள மக்களுக்கு உய்விலையென்றும் அவர் குறிப்பிட்டார்.

திரு. அப்துல் மொனிம் தமது பதவியை ராஜினுமா செய்தபின்னர் லண்டனுக்குப் புறப்பட்டார். ஐ. நா. வில் வங்காளதேச விடுதலைக்குத்தாம் ஆதரவு தேடப்போவதாகவும் கிழக்குப்பாகிஸ்தானில் தாமும் ஒரு சொரில்லா வீரனுக மாறி விடுதலைக்காகப்போராடக் கூடும் என்றும் அவர் சொன்னார்.

### உலகசமாதான செயலகம்

கிழக்குப்பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து மேற்கத்திய நாடுகள் பாராமுகமாக இருந்து வருகின்றன வென்று உலக சமாதானச்சபையின் செயலகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஹெல்சிங்கியில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலங்கடந்து இந்த வேளையிலாவது ஷேக் முஜிபுர் ரஹ்மான் விடுதலை செய்யப்படவேண்டும். அவர் காவலில் இருக்கும்வரை, எவ்வளவுதான் பாதுகாப்பு உத்தரவாதங்கள் கொடுக்கப்பட்டபோதிலும் இந்தியாவிலுள்ள வங்கதேச அகதிகள் திரும்பிச்செல்வார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது என சமாதானச்சபை செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவும் - சோவியத் யூனியனும் செய்துகொண்டுள்ள நட்புறவு உடன்படிக்கையை இச்சபை வரவேற்றுள்ளது. ஆசியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதுமே அமைதியைப் பேணுவதற்கு இந்த ஒப்பந்தம் உதவிபுரியும் என்று தெரிவித்துள்ளது.

## மாஸ்கோவில் அதிபர் சதாத்

மாஸ்கோ அக் 12

எகிப்திய அதிபர் அன்வர் சதாத் நேற்று மாஸ்கோ வந்துசேர்ந்தபோது கிரம்ளின் தலைவர்களான அதிபர் பொட்கார்னி, கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் பிரெஸ்னேவ், பிரதம மந்திரி கொஸிஜின் ஆகிய மூவரும் அவரை எதிர்கொண்டு வரவேற்றனர்.

ஐ நா கூட்டத்தில் கலந்து கொண்டபின் மாஸ்கோவுக்கு வந்துள்ள எகிப்திய வெளிநாட்டமைச்சர் திரு. றியாத் அதிபர் சதாத்தை நேற்று சந்தித்து அளவளாவினர். ஐ நா வில் மேற்காசிய பிரச்னை சம்பந்தமாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றியும் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் வில்லியம் ரோஜர்ஸுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பற்றியும் றியாத் அதிபர் சதாத்திடம் விபரித்து கூறியதாகத் தெரிகின்றது.

மாஸ்கோவுக்கு ஏற்கனவே விஜயம் செய்துள்ள எகிப்திய பாதுகாப்பு அமைச்சரும அதிபர் சதாத்தை சந்தித்தார்.

எகிப்திய அதிபர் சதாத் இன்று சோவியத் தலைவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பர்.

ஐ. நா. வை தொடர்ந்து புறக்கணித்தால்

## தென் ஆபிரிக்காவை வெளியேற்ற வேண்டும்

### இந்தியா வலியுறுத்து

நியூயோர்க், அக் 12

தென்னுபிரிக்கா தொடர்ந்தும் ஐ நா. வின் கட்டளைகளுக்கு பணிந்து செயற்பட மறுத்து வந்தால் அதனை ஐ நா சபையிலிருந்தே வெளியேற்றிவிட வேண்டும்என்று இந்தியா யோசனை கூறியிருக்கிறது.

தென்னுபிரிக்க ஐ நா. வின் கட்டளைகளைத்தொடர்ந்து புறக்கணித்து வருவது பற்றி இந்தியபிரதிநிதி திரு. சமர்சென் நேற்று ஐ நா. வில் பேசினுர்.

தென் மேற்கு ஆபிரிக்காவில் தென்னுபிரிக்கா இன்னமும் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதாகக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை 42 நாடுகள் தயாரித்திருக்கின்றன. ஆசிய ஆபிரிக்க நாடுகளால் உருவாக்கப் பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை செக்கோஸ்லவாக்கியாவும் ஆதரிக்கின்றது.

### சாம்பியாவின் குற்றச்சாட்டு

சாம்பியாவின் எல்லைப் பகுதியில் தென்னுபிரிக்கா ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக சாம்பியா செய்துள்ள புகாரின் மீது தென்னுபிரிக்காவைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானம் மீது பாதுகாப்புச்சபை விரைவில் முடிவு எடுக்கும் என்று தெரிகின்றது.

### தீப்பற்றி யுவதி மரணம்

கண்டி, செவ்.

ஆடையில் தீப்பற்றி 16 வயதான இளம்பெண் மரணமானுர். இச்சம்பவம் டெலபோக்க எஸ்டேட்டில் நடைபெற்றது. கதிரவேல் முருகன் வள்ளியம்மா என்ற இந்த யுவதி தேநீர் தயாரித்துக் கொண்டிருக்கையில் தவறுதலாக ஆடையில் தீப்பற்றிக்கொண்டதாக விசாரணையில் தெரியவந்தது. விபத்தினுல் ஏற்பட்ட மரணம் என திடீர் மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

### பரிசளிப்பு விழா

உடுவில், செவ்.

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஸ்தாபகர் நினைவுதினமும் பரிசளிப்புவிழாவும் இம்மாதம் 15-ம் திகதி நடைபெற இருக்கிறது.

இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் பரிசளிப்பு பேருரை நிகழ்த்துவார். வவுனியா மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு இ. மாணிக்கவாசகர் ஸ்தாபகர் உரைநிகழ்த்துவார் திருமதி வித்தியானந்தன் பரிசில்களை வழங்குவார்.

லண்டன் நூல் கண்காட்சியில்

## தனிநாயகம் எழுதிய தமிழர் பற்றிய நூல்

லண்டன், அக் 12

இலங்கை இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளைப் பற்றிய விபரங்களைத் தெரிவிக்கும் சுமார் 100 நூல்கள் லண்டனிலுள்ள காமன்வெல்த் நிறுவனத்தில் நடைபெறும் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

இந்த நூல்களில் இலங்கையைச் சேர்ந்த எக்ஸ் எஸ் தனிநாயகம் அடிகளின் தமிழ்கலாசாரமும் நாகரிகமும் என்ற ஆங்கில நூலும் இடம்பெற்றுள்ளது. கலை, கலாசாரம், வர்த்தகத் துறைகளில் தமிழர்கள் சாதித்துள்ளவற்றை இந்நூல் விளக்குகின்றது.

"இலங்கையின் கதை" என்ற பெயரில் சு. எஃப். சி. லுட்விக் எழுதிய நூலும் காட்சியில் இடம் பெற்றுள்ளன. தென் ஆசியா. இந்து - பாக் உபகண்டம் ஆகியவற்றிலுள்ள நாடுகளின் அரசியல், வரலாறு, கலை, வனவிலங்கு போன்ற பலதுறைகள் பற்றிய விபரங்கள் அடங்கிய சுமார் 1,200 வரையும் நூல்கள் இக் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்கான காட்சிப் பகுதியில் ஜோன் கிகால்டுவெல்லின் "இலங்கைக்குப் போவோம்" என்ற நூல் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

காமன்வெல்த் நிறுவனத்தின் பிரிட்டிஷ் தேசிய புத்தகசபையாரால் இந்தக்கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இந்தியா பற்றிய காட்சி பகுதியில் காந்திஜியின் சத்தியசோதனை முக்கிய நூலாக காட்சியளிக்கின்றது. காந்திஜி எழுதிய பல நூல்களும் இருக்கின்றன. நேருஜி பற்றிய நூல்களும் உள்ளன.

இந்த நூல்கண்காட்சியை ஆயிரக்கணக்கான வர்கள் ஏற்கனவே பார்த்துவிட்டார்கள். காட்சி முடிவதற்கு முன் சுமார் 12,000 பேர் இங்கு விஜயம்செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

காட்சி முடிவடைந்த பின்னர் தேசியபுத்தகசபை அவைகளை சேர்த்து மேலும் 12 மாதங்களுக்கு வைத்திருக்கும். பின்னர் பிரிட்டன் முழுவதிலுமுள்ள பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள் போன்றவற்றுக்கு கடன்முறையில் அவை வழங்கப்படும்.

தாய்வான் வெளியேற்றப்பட்டால்

## யு. எஸ். நிதி உதவியை குறைக்க வேண்டுமாம்

நியூயோர்க், அக் 12

ஐ. நா விலிருந்து தேசிய சீனு வெளியேற்றப்பட்டால் ஐ நா. வுக்கு அமெரிக்கா கொடுத்து வரும் நிதிஉதவிகளில் பெரும் பகுதியை வெட்டிக் குறைத்துவிடவேண்டும் என்று 21 பேர் கொண்ட அமெரிக்க செனட்டர்கள் குழு அமெரிக்க அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளது.

இதேபோன்று அமெரிக்க பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் பலரும் அரசாங்கத்தைக் கோரவிருக்கின்றார்கள் என்று தெரிகின்றது.

செஞ்சீனுவை ஐ. நா. சபையில் அனுமதிக்கவேண்டும் என்று சிங்கப்பூர் வெளிநாட்டுமந்திரி திரு ராஜரட்ணம் நேற்று ஐ நா. வில் வற்புறுத்திப்பேசினுர். ஐ நா. வில் மக்கள் சீனுவுக்கு இடம்கொடுக்கவேண்டும். தாய்வான் அதன் ஒரு பகுதிதான் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினுர்.

### பேராசிரியர் கடத்தப்பட்டார்

ஜார்ஜ்டவுண் (கயானு), அக் 12

இங்கு பணிபுரியும் இந்தியரான ஜோஷுவா ராமசாமி என்ற பேராசிரியர் கடத்தப்பட்டார். இவரைக் கடத்தியவர்கள் யாரென்று தெரியவில்லை. அரசாங்கத்துக்கு எதிரான இயக்கம் ஒன்றின் தலைவராக அவர் இருந்து வருகிறார். அவர் மார்பில் 4முறை சுடப்பட்டதாகவும் ஆஸ்பத்திரியில் அவர் சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### 4000 பேருக்கே இடம்

கோட்டை, செவ்வாய்

நாட்டில் உள்ள 27 ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளிலும் 4000 பேருக்கே அடுத்தாண்டு பயிற்சிபெற இடமளிக்கப்படும்.

இப்பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிபெற இவ்வாண்டு 53000 பேர் விண்ணப்பித்துள்ளனர். இத்தொகையில் 4000 பேருக்கே இடமளிக்கப்படவுள்ளது. இவர்களுக்கான பயிற்சி அடுத்தாண்டு ஜனவரியில் ஆரம்பமாகின்றது.

### ஆசிரியர்கள் மகாநாடு

காரதீவு, செவ்வாய்

காரைநகர் துறைக் கல்வி வட்டாரப் பாடசாலைத் தலைமையாசிரியர்கள் அடங்கிய மகாநாடொன்று புங்குதீவு அரசினர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. காரைநகர் துறை வட்டாரக்கல்வியதிகாரி திரு. அ. சி. தங்கையா இதில் கலந்துகொண்டு ஆசிரியர்களின் பொறுப்புபற்றி உரையாற்றினர்.


## தம்பி அன் கோ.

ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்

1. ரூபா 1000/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)

வருடம் ரூபா 125/- வட்டி கொடுக்கப்படும்.

2. ரூபா 500/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)

வருடம் ரூபா 63/- வட்டி கொடுக்கப்படும்.

குறிப்பு:-

இந்த ஜுபிலி சேமிப்பில் ஒருவரிடமிருந்து ரூபா 1000/- அல்லது ரூபா 500/- வாங்கப்படும்.

மறுவிபரங்களுக்கு:

தம்பி அன் கோ.

வண்ணூர்பண்ணை ... திருநெல்வேலி

யாழ்ப்பாணம்.


98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கச் செய்திகள்

உடுவில் செவ்வாய்

வடமாகாண ஆசிரியர் சங்க புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு கே கைலாசிவம், செயலாளர்: திரு எஸ் சிவவாகீசர். பொருளாளர்: திரு கே சிவசம்புநாதன். பரீட்சைச் சபைச் செயலாளர்: திரு எம் திருநீலகண்டசிவம். உபசெயலாளரும் பத்திராதிபருமாக திரு ஆ க சுந்தரேசன். தேசிய ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள்: திரு கே கதிர்காமநாதன் எம் சண்முகலிங்கம், வி சிவசுப்பிரமணியம்.

0 0 0

வலிகாமம்வடக்கு ஆசிரிய சங்க உத்தியோகத்தர் விபரம் வருமாறு: திரு இ சிவநேசன், தலைவர்: திரு ஆ கல்யாணசுந்தரேசன், செயலாளர்: திரு என் சிவநாதம் காசாளர்.

0 0 0

கிண்ணியா, செவ்வாய்

அரசாங்கப் பொது ஊழியர் சங்கத்தின் 8வது ஆண்டு விழாவும் பொதுக்கூட்டமும் கடந்த மாதம் 25ந் திகதி திருக்கோணமலையில் திரு க இராசேந்திரம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: சி இராசையா. துணைத்தலைவர்கள்: ம சின்னத்தம்பி, இருச்செல்வகுமார். பொதுச்செயலாளர் பொ நாகராஜா, துணைச் செயலாளர்கள்: க கந்தராசா இ மாணிக்கம் பொருளாளர்: ம இரத்தினம். துணைப்பொருளாளர்: த சித்திரவேல். 11 பேர் செயற்குழுவினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

அனுராதபுரம், செவ்.

அனுராதபுரம் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலய பெற்றோர்-ஆசிரியர் சங்க நடப்பு வருட நிர்வாகிகள் பின்வருமாறு:

தலைவர்: ஜனாப் எஸ் லி ஜனுக்ஹஞ், உபதலைவர்கள்: ஜனாப்கள் எம் எம் டி தீன், ஏ ஏ ஹமீட், இணைச்செயலாளர்கள்: ஜனாப்கள் எம் ஏ சுல்தான், அன்பு ஜவஹர்ஷா பொருளாளர்: ஜனாப் ஓ ஏ அப்துல்ரகுமான், செயற்குழு: ஜனாப்கள் எல் ஏ மஜீட், பி எம் அன்சார், பி எஸ் ஏ நூர், பி ஏ அஹமட், ஐ எல் தாஹா, ஏ எஸ் எம் யூசுப், யூ அபுசாலி, முபீன், எல் எச் எஸ் அலாவுதீன், திருமதி என் ஆர் தாஜீதீன்.

0 0 0

வக்கை, செவ்வாய்

வலிவெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு இ பாக்கியநாதன் தலைமையில் கூடி மேற்படி பாடசாலைப் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தினால் கட்டப்பெற்ற நெடிய கட்டிலுள்ள பாடசாலையை நவம்பர் மாதத்தில் திறந்து வைப்பதெனத் தீர்மானித்தது. அத்துடன் பாடசாலையில் விஞ்ஞானகூடமொன்றை அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர் இ பாக்கியநாதன், உபதலைவர்: ம மரி லீன்பிள்ளை, காரியதரிசி: எம் பாலசுப்பிரமணியம், தனாதிகாரி: வி சிவகுககாசன், மற்றும் 7பேர்கள் நிர்வாகசபை அங்கத்தினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## "இராமநாதன் கல்லூரி வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர்"

உடுவில் செவ்வாய்

திறமையும் தராதரமும் கொண்ட விஞ்ஞான கலைப்பட்டதாரிகளால் பயிற்றுவிக்கப்பட்ட பல மாணவிகள் க பொ த பரீட்சையில் நல்ல உயர்தர சித்திகளை பெற்றபின்னர் மேல் வகுப்புகள் படிப்பதற்காக வேறு பாடசாலைகளை சென்றடைகின்றனர். பிறபாடசாலைகளில் பல்கலைக்கழக புகுமுகவகுப்பில் சேர்ந்து படித்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்படும் மாணவிகளில் பெரும்பாலோர் தம் ஆரம்பக்கல்வியை இக் கல்லூரியிலேயே பெற்றவராக காணப்படுகின்றனர்.

உடுவில் இராமநாதன் கல்லூரிக்கு முதலாம் தர அதிபராக பதவி உயர்வு பெற்ற திருமதி அருணாசலத்துக்கு மேற்படி பாடசாலை பெற்றோர் ஆசிரிய சங்கத்தினரால் அளிக்கப்பட்ட இராப்போசனவிருந்தில் பேசிய உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. எஸ் முத்துலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி அருணாசலம் ஒரு பொதுநலவாதி. பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர். அவரது சேவைக்கேற்ற பரிசாகவே இப்பதவி உயர்வை கருத வேண்டும். அவர் பெயரில் ஒரு மண்டபம் இக் கல்லூரியில் அமைக்கப்பட வேண்டுமென்று பாராட்டுரை வழங்கிய வழக்கறிஞர் திரு ஆர் என் சிவப்பிரகாசம் கூறினார். பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் பெயரால் திருமதி அருணாசலத்துக்கு திரு ஆர் என் சிவப்பிரகாசத்தால் அன்பளிப்பு ஒன்றும் வழங்கப்பட்டது.

## தடை விதிக்கவும்

ஊரதீவு, புதன்

இலங்கையின் தலைசிறந்த பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் இலக்கிய கர்த்தாக்களும் உருவாகவும் தமிழ் தென்னகத்து அறிஞர்களின் சொற்பொழிவுகளும், எழுத்துக்களும் காரணமாயிருந்தன. எனவே இந்தியப்பத்திரிகைகள் சிலவற்றிற்கு தடைவிதிக்கும்நோக்கத்தை அரசு கைவிடவேண்டும்

ஊரதீவு இளந்தமிழர் மன்ற பொதுச் சபை சார்பில் தலைவர் திரு க மகேந்திரன், செயலாளர்; திரு ந இராசதுரை ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

## அகதிகள் தினம்

கோட்டை, திங்கள்

பாகிஸ்தான் அகதிகள் தினம் இம்மாதம் 17ந் தேதி இலங்கையில் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

......

## மன்னார்மாவட்ட கூ.ச. இயக்குனர்கள்

மன்னார், செவ்

அரசாங்கத்தின் கூட்டுறவு புனரமைப்புக் கொள்கை பின்படி மன்னாரில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் வந்தன. அதற்கு இயக்குனர்கள் தெரிவும் நடைபெற்றுள்ளது. விபரம் வருமாறு:

மன்னார்: ஜனாப் என் எஸ் ஏ காதர், ஜனாப் எம் ஏ சாதர், திரு எம் ஏ துரம், திரு ஐ பிரான்ஸிஸ்.

நானாட்டான் பகுதி: திருவாளர்கள் பி திருச்செல்வம், எஸ் இம்மனுவேல் பிள்ளை, பி சார்லஸ் பீரீஸ், எம் எஸ் பொன்னுக்கோன்

மாந்தை மேற்கு: திரு பி பெர்னாண்டோ, ஜனாப்கள் எம் பி எம் முகம்மது காசீம் ஆலீம், ஏ ஸி எம் மஹ்றூப் திரு எஸ் தாமோதரம்பிள்ளை

மாந்தை தெற்கு: திருவாளர்கள் ரத்ன சபாபதி, டேவிட் சிமியோன் எம் லூயமாலை மரிய ம்பிள்ளை, ஆர் விநாயகமூர்த்தி.

மாந்தை வடக்கு: திருவாளர்கள் என் ஏஸ் ராஜதுரை பி எம் லூயமாலை. ஜனாப்கள் எம் அப்துல் காதர், எல் சேகுமுகைதீன்.

வவுனிக்குளம்: திருவாளர்கள்; ஈ அருணாசலம், எம் பொன்னம்பலம், எஸ் செல்லத்துரை; எஸ் கணபதிப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் (13-10-71)

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவதற்சிந்தனை, 6-25 இஸ்லாமியதற்சிந்தனை 7-00 விவசாய நிகழ்ச்சி, 7-15 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை 8-00 இசைவேளை, 8-15 இன்னிசைப் பாடல்கள்.

இரவு 6-15 இதிலதை நிகழ்ச்சி, 6-30 பாட்டு, 7-00 கிராமசஞ்சிகை, 7-15 திருக்குறள் வகுப்பு, 7-30 வாத்தியஇசை, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.

## தப்பிச் சென்றனர்

கோட்டை, செவ்வாய்

கற்பிட்டிப் பகுதியிலுள்ள தீவொன்றில் இயங்கிவந்த அடிமைகள் முகாமிலிருந்து 10 இளைஞர்கள் தப்பி வந்துவிட்டார்கள். இவ்விளைஞர்கள் கடந்த 5 மாத காலமாக அந்த முகாமில் பலவாறு சித்திரவதை செய்யப்பட்டதாகத் தெரிவித்தனர். அனுராதபுரம் பொலிஸார் இதுபற்றி விசாரணை செய்துவருகின்றனர்.


# வெள்ளை ஆடைகளை எவ்வளவுதான் கழுவினாலும் பரிபூரண வெண்மையை அடையமுடியாது.
# உங்களுக்குத் தேவையானது றெபின் நீலம்!




சலவைத்தூளும் சவர்க்காரமும் வெள்ளை ஆடைகளைச் சுத்தமாக்குவது உண்மைதான். ஆனால் ஆடைகளை எவ்வளவுதான் கழுவினாலும் அது உண்மையான வெண்மையைத் தந்துவிடாது — இங்குதான் உங்களுக்கு றெபின் நீலம் தேவை.

றெபின் நீலம் கலப்பில்லாத சலவை நீலம். அது வெள்ளை ஆடைகளைப் பளபளப்பாக்கச் செய்கிறது. வெண்மை இழந்த ஆடைகளுக்கு வெண்மையை மீட்டுத் தருகிறது.

உங்கள் ஆடைகளை வழமைபோல் சலவை செய்யுங்கள். ஆனால் முடிவில் றெபின் நீலத்தில் தோய்த்தெடுக்க மறவாதீர்கள். ஆடைகளுக்கு வெண்மையையும், பளபளப்பையும் கொடுப்பதற்கு நிச்சயமான சுலபமான வழி இதுவே!

**ஆடைகள் வெண்மையாகப் பளபளப் பாகப் பிரகாசிக்க றெபின் நீலம் பாவியுங்கள்.**

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.

GRANT


S. GANNEN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாசகம்

செல்வம் சன்மார்க்கத்தால் அடைய முடிவதில்லை என்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆனால் உண்மை பசுதேனில் வறுமையும் சன்மார்க்கத்தால் நீங்குவது அபூர்வம் என்பதேயாகும்.

— பௌத்தம்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna   Telephone: 389

ஈழ வருஷம் விரோதிகிருது வருஷம் புரட்டாதிமாதம்
27 ந் திகதி (18-10-71)

# அரசாங்க ஊழியர் நிலை

அரசாங்க ஊழியர்களின் கடமைகளையும் பொறுப்பையும் பற்றி அமைச்சரவையின் பதில் தலைவரும் நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சருமான திரு. மைத்திரிபால சேனநாயகா, அரசாங்க ஊழியர் மத்தியில் விளக்கியிருக்கிறார். நல்ல விஷயத்தை மிகப் பொருத்தமான நேரத்தில் சரியான முறையில் அவர் எடுத்துக் கூறியிருக்கிறார். அரசாங்க ஊழியர்கள் பொதுமக்களை விட்டு விலகியிருக்கக் கூடாதென்றும் அவர்களுக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் அவர்கள் தங்கள் பங்கைச் செலுத்த வேண்டுமென்றும் அமைச்சர் கேட்டிருக்கிறார். அவரது வேண்டுகோள் பயனளிக்குமென்று எதிர்பார்க்கலாம்.

'தங்கள் கீழ்ப்பணிவுள்ள ஊழியன்' என்று பொதுமக்களுக்கு எழுதப்படும் கடிதத்தின் முடிவில் குறிப்பிட்டுக் கையொப்பம் இடுவதைத் தவிர பொதுமக்களைக் கீழ்ப்பணியச் செய்வதுதான் அரசாங்க ஊழியர்களின் முக்கிய பணியென்ற மனப்பான்மை விடுதலையடைந்தபின்னரும் இலங்கையில் சில அரசாங்க ஊழியர்கள் மத்தியில் நிலவுவது நாடறிந்த உண்மை. அந்நியராட்சியின்போது அரசாங்க ஊழியர்கள் அந்நிய அரசாங்கத்துக்கு விசுவாசமுள்ளவர்களாகவும் பொதுமக்களைப் பயமுறுத்திப் பணியவைக்கவேண்டியவர்களாகவுமிருந்தனர். சுதந்திர இலங்கையில் அரசாங்க ஊழியர்கள் என்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின்கீழ் மக்களுக்குச் சேவைசெய்யும் கடமையும் பொறுப்புமுடைய மக்கள் தொண்டர்களாவர்.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் அரசாங்க ஊழியர்கள் 'அரசனுக்கும் மேலாக அரசாங்கத்துக்கு அதி விசுவாசமாக' இருந்திருப்பார்கள். அன்று அப்படித் தானிருக்கவேண்டும். இன்றும் கூட அரசாங்க ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் எந்த விதமான அரசியல்கொள்கைகளைக் கொண்டிருப்பினும் கொள்கையை வகுக்கும் அரசாங்கத்தின் திட்டங்களைச் சிரமேற்கொண்டு விசுவாசத்துடன் செயல்படுத்த வேண்டியது அவர்களது கடமை. ஆனால் பொதுமக்களை உதாசீனப்படுத்தி 'அதிகாரவர்க்கம் என்கிற' தமது நிலையை உறுதிப்படுத்தும் மனப்பான்மை இன்றும் சிலரிடம் நிலவுகிறது.

இவர்களைக் கருத்தில் கொண்டுதான் அரசாங்க ஊழியர் மக்களுடன் நெருங்கிப் பழகவேண்டுமென்று அமைச்சர் மைத்திரிபால சேனநாயகா கூறியிருக்கவேண்டும்.

இதேசமயம் மக்களுடன் நெருங்கிப் பழகுவதென்பது சமீபகாலத்தில் மக்கள் என்பது ஒரு சில கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் என்ற ஒரு புதிய முறையை ஏற்படுத்தியிருக்கிறது. அரசாங்க சேவையில் உயர்மட்டத்திலுள்ளவர்களையும் அரசாங்க இலாகாக்கள் சிலவற்றையும் ஒரு கூட்டம் எந்நேரமும் சூழ்ந்துகொண்டிருக்கிறதென்பது பொதுவாக நாட்டில் நிலவும் புகார்.

இது மக்களாட்சி யுகம். மக்கள் தெரிவுசெய்த அரசாங்கம்தான் ஆட்சியிலிருக்கிறது. மக்களுக்கு நன்மை செய்வதே அரசாங்கத்தின் கொள்கையும் இலட்சியமுமாகும். 'தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன்' என்று தமிழில் ஒரு பழமொழியுண்டு. அதே போல் 'மக்களாட்சியில் ரயில் ஓடுகிறது. அது எங்கள் ரயில்தான். நாங்களும் அதை ஓட்டுவதற்கு உரிமை இருக்கின்றது என்று கூறிக்கொண்டு ரயில் பிரயாணிகள் யாவரும் ரயில் என்ஜினில் ஏறி ரயிலைச் செலுத்த முற்பட்டால் என்ன நிலை?'

மக்கள் அரசாங்கம் எங்கள் அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டு சில சில தேவைகளுக்காக அரசாங்க இலாகாக்களுக்குள் பலரும் நுழைந்து தங்கள் சொற்படிதான் நடக்க வேண்டுமென்று அரசாங்க ஊழியர்களை அவர்கள் நிறைவேற்றமுடியாத காரியங்களையும் நிறைவேற்ற வேண்டுமெனவற்புறுத்தினால் மக்களுடன் தொடர்புகொள்ள வேண்டுமென்பதற்காக அவர்கள் நிறைவேற்ற முடியுமா?

மக்களை மதியாது உதாசீனப்படுத்தும் முன்னைய அதிகார வர்க்கமுறையும் மக்களாட்சி என்று கூறிக்கொண்டு அரசியல் நோக்கத்தோடு ஒருசிலர் தமது காரியத்தைச் சாதிப்பதற்காக முனைவதும்; பொதுமக்களுக்கும் பணிசெய்ய வேண்டிய கடமையும் பொறுப்புமுள்ள அரசாங்க ஊழியர்களுக்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்துவதாகும்.

கடந்தகால அனுபவத்தைக்கொண்டும், இப்போதைய நிலைமையைக்கருத்தில் கொண்டும் தனி வழியொன்றை வகுக்கவேண்டியது அரசாங்க ஊழியர்களினதும் அரசாங்கத்தினதும் கடமையாகும்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" [illegible] யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இடமாற்றம்

சுழிபுரம், செய்

சுழிபுரம் தமிழ் கலவன் பாடசாலைக்கு [illegible] வித்தியாலயத்தில் [illegible] மையாற்றிய [illegible] இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# ஜி.ஸி.ஈ. வாலிப உள்ளம் தவிப்பு!

நேற்று ஒரு வாலிபர் வந்தார் ஜி ஸி ஈ. பரீட்சையில் 7 பாடங்களில் சித்தி. ஐந்தில் விசேஷ சித்தி பெற்றவர். வேலைக்காகப் பலரிடம் சென்றும் எவ்வளவோ அலைந்தும் ஒரு வேலையும் கிடைக்கவில்லை யென்றும், தம்மைப்போல் இலங்கையிலே இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட வாலிப உள்ளங்களின் தவிப்பை ஒரு கட்டுரையாக எழுதியிருப்பதாயும் அதை வெளியாகும்படியும் கேட்டார்.

வேலை கொடுக்க முடியாவிடினும் கட்டுரையாவது வெளியிடுவது அவருக்கு சிறு ஆறுதலாக இருக்குமல்லவா?

அவர் எழுதுவதாவது:-

1. பொழுதைக் கழிப்பதெப்படி? 2. தொழிலைப் பெறுவது எப்படி? 3. வாழ்வை வளப்படுத்துவதெப்படி? 4. குடும்பத்தைக் காப்பாற்றுவதெப்படி? 5. உயர்கல்வி கற்பது எப்படி? 6. நேர்மையாக வாழ்வது எப்படி?

ஜி. ஸி ஈ. வரைக்கும் பொழுதைக் கட்டிக்கழித்து பல இன்னல்களுக்கிடையில் கல்வி கற்கிறோம். படிப்பு முடிந்தது. பரீட்சையில் சித்திபெறுவோர் சிலர். சித்தி அடையாதோர் பலர்.

சித்தி அடைந்த சிலர்:- நாம் என் செய்வோம் மூத்தோர்கள் என்ற பெயரோடு 'மூடர்கள்' வாழும் இலங்கையில் பிறந்தோம். அடிக்கடி நாட்ட நல்லவர் இல்லையே! வீட்டில் சிறுதொகை பணமும் இல்லையே. உயர்கல்வி கற்பதென்றால் உண்மையிலே உயிர் ஆசை ஆகும் புத்தகம் கொப்பி வேண்டும். உபகரணங்கள் வாங்கவும் பணம் இல்லையே.

போகட்டும் வாயையும் வயிற்றையும் கட்டி இவற்றை வேண்டினால், அண்மையில் பாடசாலை இல்லை. பத்து மைல் தூரம் செல்லவேண்டும். பிரயாணப் பணத்துக்கு எங்கே போவது?

அதுவும் போகட்டும். ஏதாவது வேலையைத் தேடுவோம். ஓடோடிச்சென்று கொற்றைப் பார்க்கவேண்டியதுதான். அப்பாடி எத்தனை எத்தனை விண்ணப்பப் பத்திரம். ஒரு படிவம் அனுப்ப ஒரு ரூபாய்க்குமேல் செலவு. பணமும் போகுது. படிவமும் போகுது. நேர்முகப் பரீட்சை வருகுது. பிரயாணச் செலவுக்காகக் கடன் பட்டபணம் ஐம்பதுக்கு மேல் போகுது. இப்படி எத்தனை. எங்கே வேலை?

வருடங்களும் விரைகின்றன. வாழ்வும் சலிக்கின்றது. வாலிப உள்ளம் தவிக்கிறது. நம்பிக்கை நழுவுகிறது. ஒரு சிலருக்கு வேலை கிடைப்பதாய்க் கேள்வி, எப்படி வேலை கிடைக்கிறது?

விடுவளவு ஈடுவைச்ச பணம் ஐயாயிரத்துக்கு மேலே

## ஐயனார் எழுதுவது

போயிருக்காம்! அப்பாடி 5 சதம் இல்லையே! இன்னொருத்தன்:- உனக்கென்ன தெரியும் எங்கன்ர ஐயா பட்டபாட்டை. கொழும்புக்குப் போய், மாமாவைக் கட்டிவந்து எம் பிட்டைக் கடிசம்வேண்டி பேந்து கொழும்புக்குப்போய் மந்திரியைப் பிடிச்சுத்தான் இந்த வேலை. அப்பாடி. எப்பாடு, எம்பாடு!

எனக்கோ ஐயாவும் இல்லை மாமாவும் இல்லை. பணமுமில்லை. என்னபண்றது?

நாங்கள் கஷ்டப்பட்டுப் படித்து ஐந்தாறு 'கிறடிட்டுகளை' எடுத்து, என்ன பிரயோசனம்? ஜி ஸி ஈ. பாஸ் பண்ணாமல் பணத்தையும் செல்வாக்கையும் காட்டி, வேலைபெறுவோர்சிலர். மிகுதிப் பேர்? அப்பிளிக்கேசன் போடுவதில் என்ன பிரயோசனம்?

தோட்டம் செய்தால் என்ன? என்கிறீர்கள். சுலபமாய்ச் சொல்லலாம். ஆனால் தோட்டம் செய்யக் காணியோ, மிசின்வேண்டப் பணமோ எங்கே இருக்கு? தொழிற்சாலைகளும் இல்லை.

வீடும் சொந்தமில்லை. சந்திக்குப்போய் கூட்டமாய் நின்றுகதைச்சால் பொலிஸ் ஆக்கினை ஒருபக்கம் தீய உணர்ச்சிகள் மேலிடுகின்றன! பொழுதைக்கழிக்க படம்பார்க்கலாம். பணத்துக்கு வீட்டிலும் வெளியிலும் திருடத்தூண்டுகிறது. பொழுதைக்கழிக்க முடியாமல் குடிபுகைத்தல் முதலிய தீய பழக்கங்கள் ஏற்பட்டு கொலை கொள்ளைகளில் முடிகிறது.

வாலிபர்களின் கஷ்டங்களை அறிந்துகொண்ட அரசாங்கம் முடிவில் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கத் தவறுவதில்லை.... என்றெல்லாம் எழுதியிருக்கிறார்.

வேலையற்ற வாலிபர்களுக்கு வெளிநாடுகளில் அரசாங்கம் உதவிப்பணம் அளிக்கின்றது. இந்தியாவில் மகாத்மா வைரா[illegible]டையை ஆரம்பித்து பயனுள்ள முறையில் பொழுதுபோக்க வழிசெய்தார். இவ்விதம் நிர்மாண முறையில் இங்கும் ஏதும் செய்யமுடியாதா?

0 0 0

அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து, பங்கத்தைப்போக மாற்றி பாவித்தேன் பரமா உன்னை, அங்கொத்தமேனிச் செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை, எங்குற்றாய் என்ற போதாய் இங்குற்றேன் என்கண்டாமே.

— அப்பர் அடிகள்

## பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், புன யாழ்ப்பாண மத்திய கல்லூரிப் பரிசளிப்புவிழா நாளை மாலை நடைபெறவுள்ளது. இக்கல்லூரிச் சதுக்கத்தில் நடைபெறும் இவ்விழாவில் திருமதி ம. ஸ்ரீகாந்தா பரிசில் வழங்குவார்.

# அமைதிக்கு வழிகாட்டும் பத்திமா கடைசிக்காட்சி விழா இன்று

போர்த்துக்கல் தேசத்தில் பத்திமா என்ற கிராமத்தில் 1917ம் ஆண்டு வைகாசி மாதம் 13ந் திகதி தொடக்கம் ஐப்பசி மாதம் 13ந் திகதிவரை லூசியர் ஜசிந்தா, பிரான்சிஸ் என்ற மூன்று சிறுவர்கட்கும் தேவதாய் அளித்த காட்சிகள் உலகப்பிரசித்தி பெற்றவை.

பாவத்தால் மோட்சபாக்கியத்தை இழந்துபோகும் ஆன்மாக்களுக்கு நல்லெறி காட்டி அவர்கள் கடைத்தேறும் மார்க்கத்தை பத்திமாவில் அளித்த காட்சிகளின் போது மரியன்னை வற்புறுத்தினார். தேவதாயின் பத்திமா அறிவுறுத்தல்கள் பின்வருமாறு வகுக்கப்படும்.

செபம், தவம், செபமாலை ஓதுதல், பாவப்பரிகார முயற்சிகள், முதற்சனிக்கிழமைப் பக்தி மாசற்ற இருதய நாயகியின் பக்தி.

தேவதாய் பத்திமாவில் கொடுத்த அறிவுரைகள் உலகமுழுவதும் பரப்பப்பட்டுவருகின்றன. இப்பக்தியை பரப்புமுகமாக சில ஆண்டுகளுக்குமுன் பத்திமா அன்னையின் சொரூபங்கள் உலகமுழுவதும் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டமை யாவரும் அறிந்ததே.

பிரான்ஸ் தேசத்திலிருந்து [illegible] பரப்புப்பணியில் ஈடுபட்டு [illegible] ஆயர் தேவதாயாரில்

மிகுந்த பக்தி கொண்டவர். பத்திமாவில் தேவதாயன்னை தந்த அறிவுரைகளை ஈழத் தமிழரிடையே பரப்பமிகுந்த ஆவல்கொண்டு அதற்காக

சாமுவேல் பெனடிக்ற்

ஒரு தலத்தை தேடித்திரிந்தார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பண்டத்தரிப்புக் கிராமம் அவர் சிந்தையைக் கவர்ந்தது. அங்கு போர்த்துக்கேய காலத்தில் நாட்டப்பட்டதாகக் கூறப்படும் அரசமுருக்கு என்ற புராதன மரத்தின் பக்கத்தையே அவர் தெரிந்தெடுத்தார்.

1945ம் ஆண்டு மார்கழி மாதம் நான்காம் தேதி தேவதாயின் திருச்சொரூபம் ஆடம்பர பவனியாக அரசமுருக்கடிக்கு எடுத்துச்

செல்லப்பட்டது. பத்திமாகிரி என்ற புதிய நாமத்துடன் அப்பகுதி ஒரு திருயாத்திரைத்தலமாகி இன்றுவரை மரியாயின் பக்தர்கட்கு அடைக்கலமும் ஆறுதலும் ஆன்மீக நன்மைகளும் அளித்துவருகின்றது.

பத்திமாபதியில் தேவதாய் தந்த கடைசிக்காட்சிவிழா இன்று அகில உலகிலும் ஆடம்பரமாக கொண்டாடப்படுகின்றது. 1917ம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ந் திகதியன்று நண்பகலில் பத்திமாபதியில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பார்வையாளர்கள் கூடிநிற்க, மரியன்னை தனது இறுதிக்காட்சியை சிறுவர்கட்கு அளித்தாள்.

அக்காட்சியின் போது தனது அறிவுரைகளை மீண்

(5-ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

### க. மீனாட்சிபிள்ளை

கனகசபை மீனாட்சிபிள்ளை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பஞ்சாட்சரத்தின் தாயாரும் சி. எம். சின்னத்துரை (இளைப்பாறிய கணக்காளர் பரிசோதகர் கிளிநொச்சி)பி. வேலாயுதபிள்ளை (தபால் அதிபர் கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் ஆவர். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிகைக்காக 13-ம் திகதி (இன்று) மு. ப. 10 மணியளவில் பலாலி வீதி 82-ம் இலக்க இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org